## தலைப்பு 20 – தேர்தல்கள் ஆணைக்குழு

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேர்தல்கள் ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 01 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6.1 (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) சென்ற ஆண்டு தொடர்பாக, நிதிக்கூற்றுக்கள் மீதான என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) நிதிச் செயலாற்றல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி அச்சுக் குறிப்புக்களின் படி செலுத்தல்கள் ரூபா 29,414,313 ஆயினும், நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 29,279,986 என | ரூபா 134,327 ஆன கடன் மீதியை 2021 நவம்பர் மாதம் கட்டி முடிப்பதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டும் அதனை சிகாஸ் வேலைத்திட்டத்திற்கு உட்படுத்தும் போது | சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிக்கப்பட்டுள்ளமையினால் நிதிச் செயலாற்றல் கூற்றில் மொத்த செலவினம் ரூபா 134,327 குறைவாக காட்டப்பட்டது. | தவறுதலாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் (தலைப்பு இலக்கம் 020) தலைப்புக்கே செலுத்தப்பட்டமையினால் இவ்வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இத்தவறினை திருத்துவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படும். | |
| (ii) | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய கணக்கு வழிகாட்டல் இலக்கம் 2021/03 கொண்ட சுற்றறிக்கையின் 7.2 பந்தியின் பிரகாரம் வேறுபாட்ட வருமானங்களினை கணக்கீட்டு உத்தியோகத்தர் சார்பாக பதிவிடும் நிறுவனங்களினால் சேகரிக்கப்பட்ட வருமானத்தினை நிதிச் செயலாற்றல் கூற்றில் உட்படுத்தப்படாலாகாததுடன் அவ்வருமானத்தினை கட்டுநிதி இணக்கக் கூற்றினுள் சீராக்கப்படல் வேண்டும். ஆயினும், ஆணைக்குழுவினால் ரூபா 42,412,012 ஆன அவ்வருமானத்தினை வேறுபட்ட பிரதான பேரேட்டுக் கணக்குப் பெறுவனவுகளாக நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. | எதிர்வரும் சந்தர்ப்பங்களில் கணக்குகளை சீர் செய்யும் போது அத்தவறினை திருத்துவதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்படும். | சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். |

**(ஆ) நிதி நிலைமை தொடர்பான கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (i) | ஆணைக்குழுவின் சொத்துக்களுக்கான அட்டவணைகள் மற்றும் 2018-2021 வருடங்களில் தள்ளுபடி செய்யப்பட்ட | திறைசேரிக் கணக்குக் கூற்று இலக்கம் SA-82 படி திரண்ட நிதிசாரா சொத்துக்களுக்கான கணக்குக் கூற்றில் | பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதிவுகளின் படி மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனப் பொறி உபகரணங்களின் மீதி மற்றும் ஆதனப் பொறி உபகரணங்களின் ஒதுக்கு மீதி ரூபா 2,132,208,077 ஆக இருப்பினும் நிதி நிலைமைக் கூற்றில் அந்த மீதிகளின் பெறுமதி ரூபா 2,065,916,625 என காட்டப்பட்டிருந்தது. | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை விட அதிக பெறுமானம் தொழில்நுட்பக் கோளாறினால் தரவு ஏற்றம் ஏற்பட்டமையினால் பொறிகள் மற்றும் முடிக்கப்படாத வேலைகளின் கீழ் உள்ளீர்க்கப்பட்டு திறைசேரி இறுதிக் கூற்று கணக்குகளின் பெறுமதியினை அதிகமாய் காட்டப்பட்டுள்ளது. | |
| (ii) | ஆதனப் பொறி உபகரணங்களின் சென்ற ஆண்டிற்கான நிதி நிலைமை மீதான கூற்றில் திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி மற்றும் மீளாய்வாண்டில் கணக்காய்வினைக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலைமை மீதான கூற்றுக்கிடையே ரூபா 8,209,745 வேறுபாடு இருப்பினும் இது தொடர்பாக எவ்வித தகவலும் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | இவ்வேறுபாட்டினை இனங்கண்டு கொள்ள முடியாமையினால் மேற்கொண்டும் தேடிப் பார்த்து அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வேறுபாட்டினை இனங்கண்டு பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். |
| (iii) | சென்ற வருடம் பொலன்னறுவை மாவட்ட செயலாளிடம் சட்டரீதியாக கையளிக்கப்பட்ட கிரயம் ரூபா 2,254,375 வாகனத்தினை மீளாய்வாண்டில் நிதி நிலைமை மீதான கூற்றில் வாகன கிரயத்திலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | பொலன்னறுவை மாவட்ட செயலாளர் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்ட இலக்கம் GA-9490 கொண்ட வாகனத்தின் கிரயத்தினை நீக்குவதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | வாகன கிரயத்தினை பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | ஆணைக்குழுவிற்கு 2018 வருடம் சட்டரீதியாக கையேற்கப்பட்ட கிரயம் ரூபா 9,500,000 ஆன வாகனம் மற்றும் மீளாய்வாண்டில் சட்டரீதியாக கையேற்கப்பட்ட கிரயம் ரூபா 22,380,000 ஆன 04 வாகனங்கள் மீளாய்வாண்டில் கணக்கிலிடப்பட்டிருக்க வில்லை. | அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் சட்டரீதியாக ஆணைக்குழுவினால் கையேற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் இவ்வருடம் கணக்கிலிடுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வாகன கிரயத்தினை பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். |
| (v) | மீளாய்வாண்டினுள் ஆணைக்குழுவினால் ரூபா 60,050,000 பெறுமதி வாய்ந்த 10 குத்தகை வாகனங்கள் கையேற்கப்பட்டுள்ள போதும் அவ்வாகனங்களின் பெறுமதியினை கணக்கிலிடப்பட்டிருக்க வில்லை. | கையேற்றுக் கொள்ளப்பட்ட 10 வாகனங்களை தற்போது CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வாகனங்களின் கிரயத்தினை பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். |
| (vi) | ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் மற்றும் 04 கட்டிட உருப்படிகளின் சொத்துக்கள், பட்டியலின்படி பெறுமானம் ரூபா 151,213,675 ஆன போதிலும் அவற்றினை ரூபா 73,793,025 என கணக்கிலிடப்பட்டிருந்தது. | காணிகள் மற்றும் கட்டிங்கள் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் சொத்துக்களுக்கான பட்டியல் இற்றைப்படாது இருந்தமையினால் இவ்வேறுபாடு ஏற்பட்டுள்ளது. திருத்துவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படும். | காணிகள் மற்றும் கட்டிடங்களின் கிரயம் பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். |
| (vii) | கம்பஹா மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளரின் ரூபா 1,164,715 பெறுமதிவாய்ந்த உத்தியோகபூர்வ இல்லத்தினை உத்தியோகபூர்வ பிரிவின் கீழ் கணக்கிலிடப்படாமல் இருந்ததோடு, சென்ற வருடம் ஆணைக்குழுவினால் கையேற்றுக் கொள்ளப்பட்ட 9.9 பேர்ச் கொண்ட காணி மற்றும் யாழ்ப்பாண மாவட்ட | கம்பஹா உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் கண்டி மாவட்ட தேர்தல்கள் அலுவலக களஞ்சியசாலை மற்றும் உல்லாச விடுதி ஆகியவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணிக்கான மதிப்பீட்டு அறிக்கையினை பெற்றுக் கொள்வதற்கு பெறுமான மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் மதிப்பீட்டு பெறுமானம் | காணிகள் மற்றும் கட்டிடங்களின் கிரயம் பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலாளரினால் 2012 வருடம் கையளிக்கப்பட்ட காணிகள் கணக்கிலிடப்பட்டிருக்க வில்லை. | கிடைத்ததன் பின்னர் அப்பெறுமானத்தினை கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். யாழ்ப்பாண அலுவலகக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படும் காணியினை ஆணைக்குழுவிற்கு கையளிப்பதற்கு மாவட்ட செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ள போதிலும் இக்காணி தொல்பொருள் பெறுமதிமிக்க காணியாக இருப்பதனால் பிரதேச செயலகம் மூலமாக கையளிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (viii) | மீளாய்வாண்டில் 2014 செலவினத் தலைப்பின் கீழ் யாழ்ப்பாணத்தில் உள்ள கட்டிடங்கள் மற்றும் நிர்மாணப் பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 20,000,000 ஆயினும், மீளாய்வாண்டில் முடிக்கப்படாத பணிகளின் கீழ் அதனை ரூபா 25,000,000 என காட்டப்பட்டிருந்தது. | யாழ்ப்பாண தேர்தல்கள் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 20,000,000 ஆயினும், 2021.12.31 இல் உள்ளவாறான சொத்துக்கள் தரவு ஏற்றத்தினால் உண்டான தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ரூபா 25,000,000 என மூலதனமாகியுள்ளது. திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முடிக்கப்படாத பணிகளினை பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். |
| (ix) | மீளாய்வாண்டில் செலவின விடயம் இலக்கம் 2103 மற்றும் 2102 கீழ் மொத்தம் ரூபா 20,917,344 வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் பொறிகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த | 2021 ஆண்டு பொறிகள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக முறையே 2102 மற்றும் 2103 செலவின விடயங்களின் கீழ் ரூபா 20,032,050.00 மற்றும் ரூபா 885,294 செலவிடப் பட்டுள்ளன. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மீளாய்வாண்டில் இது | வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் பொறிகள் இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்தல் பிழையின்றி |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் அதனை ரூபா 37,178,580 என காட்டப்பட்டிருந்தது. | 37,178,579.87 என மூலதனமாகியுள்ளது. இத்தவறு திருத்தப்படவுள்ளது. | கணக்கிலிடப்பட வேண்டும். |
| (x) | சொத்துக்களை தள்ளுபடி செய்வதற்கான பட்டியலின் படி மீளாய்வு ஆண்டில் ஆணைக்குழுவினால் கிரயம் ரூபா 6,548,137 உள்ள பொறிகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தள்ளுபடி செய்யப்பட்டும் அப்பெறுமதியினை கணக்கிலிடப்பட்டிருக்க வில்லை. | தள்ளுபடி செய்யப்பட்ட பொறிகள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதியினை இவ்வருடம் இற்றைப் படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பொறிகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தள்ளுபடி செய்வதனை பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். |

## 1.6.3 புத்தகங்களிலிருந்து பதிவளித்தல் தொடர்பான கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சென்ற வருடம் நிதிக் கூற்று புத்தகங்களிலிருந்து பதிவளித்தல் தொடர்பான கூற்றில் திசெம்பர் 31 திகதி தள்ளுபடி செய்யப்படாது முன்எடுத்துச் செல்லப்படும் மீதியாக காட்டப்பட்டிருந்த மொத்தம் ரூபா 2,233,961 பெறுமதியான 06 வாகன விபத்துக்கள் தொடர்பான இழப்புக்கள் 2021 வருட நிதிக்கூற்றுக்களில் ஏடுகளிலிருந்து தள்ளுபடி செய்வது மீதான கூற்றில் ஆரம்பத் தள்ளுபடி செய்யப்படாத மீதிகளாக காட்டப்பட்டிருந்தன. | சம்பந்தப்பட்ட இழப்புக்களை தள்ளுபடி செய்வதற்காக திறைசேரியிலிருந்து மானியத்தினை பெற்று ஏட்டிலிருந்து தள்ளுபடி செய்வதற்காக முன்வரும் சந்தர்ப்பங்களில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஆரம்பத் தள்ளுபடி செய்யப்படாத மீதிகளை பிழையின்றி காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | ஆணைக்குழுவின் ஒரு வாகனம் தொடர்பாக மொத்தம் ரூபா 35,217 வாய்ந்த இழப்புக்கள் மீளாய்வு ஆண்டில் ஏடுகளிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. அது பற்றிய விபரங்கள் | அதனை திருத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ரூபா 35,217 ஆன இழப்பினை ஏடுகளிலிருந்து தள்ளுபடி செய்வது மீதான கூற்றில் காட்டப்பட வேண்டும். |

ஏடுகளிலிருந்து தள்ளுபடி செய்வது மீதான கூற்றில் காட்டப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 எல்லைகளை மீறுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| அரச ஊழியர்களின் முற்பண பீ கணக்கின் 2020 இலக்கம் 07 கொண்ட ஒதுக்கல் சட்டமூலமாக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள உச்ச கட்ட வரவு மீதி எல்லை ரூபா 85,000,000 எல்லை ரூபா 100,974,010 ஆனபடியால் உச்ச கட்ட வரவு மீதி எல்லை மீறல் ரூபா 15,974,010 ஆக இருந்தது. 2020 இலக்கம் 07 கொண்ட ஒதுக்கல் சட்டத்தின் 9 பிரிவின் படி உச்சகட்ட வரவு மீதி எல்லையினை திருத்திற்காக பாராளுமன்ற அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதும் 2022 மே 31 திகதி வரையிலும் அவ்வாறான அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2020 இலக்கம் 07 கொண்ட ஒதுக்கல் சட்ட மூலத்தின் கணக்கு இலக்கம் 02001 படி அதிகாரம் அளிக்கப்பட்ட உச்சகட்ட வரவு மீதி எல்லை ரூபா 85,000,000 இருந்தபோதும், எனது 2021 திசெம்பர் 15 ஆந் திகதிய சனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை வேண்டுகோளின் படி முற்பணக் கணக்கு செயற்பாடுகளின் உச்சகட்ட வரவு மீதி எல்லையினை ரூபா 115,000,000 வரை திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதாக தேசிய வரவு செலவு பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் BDA/AA/LR/01/2022 மற்றும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறியத் தரப்பட்டுள்ளது. | 2020 இலக்கம் 7 கொண்ட ஒதுக்கல் சட்ட மூலத்தின் 9 ஆவது பிரிவின் படி உச்சகட்ட வரவு மீதி எல்லையினை திருத்துவதற்கு பாராளுமன்ற அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 264 | | 2020 பொதுத் தேர்தலின் போது கொழும்பு மாவட்ட வாக்குகள் எண்ணப்படும் மத்திய நிலையத்தில் பெயர்ப் பலகைகள் தயாரிப்பதற்கு தேவைப்படும் பலகைகள் மற்றும் ஏனைய மூலப்பொருட்கள் விநியோகித்துக் கொள்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 124,110 தொகையினை தொடர்பாக மற்றும் கம்பஹா மாவட்டத்தின் 2019 சனாதிபதி தேர்தலின் போது வாக்குகள் எண்ணப்படும் மத்திய நிலையத் தளத்தின் தரையினை சீர் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 98,250 செலவினம் தொடர்பாக முத்திரை ஒட்டப்பட்ட வரவுச்சீட்டு பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. | தேர்தல் சமயத்தில் உத்தியோகத்தர்களின் வேலைப்பளு காரணமாய் இத்தவறு நேர்ந்துள்ளது. தற்போது முத்திரை ஒட்டப்பட்ட வரவுச்சீட்டு பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதுடன் எதிர்வரும் சந்தர்ப்பங்களில் ஏற்படாதிருப்பதற்கு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2006 இலக்கம் 12 கொண்ட முத்திரைக் கட்டண விசேட (ஏற்பாடு) சட்ட மூலம் | 2020 பொதுத் தேர்தல் தொடர்பாக பணம் செலுத்தப்பட்ட ரூபா 25,000 கூடிய 03 வவுச்சர் தொடர்பில், உரிய பெறுமதிக்கு முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடம் அனுப்பி வைப்பதற்கு அல்லது உரிய பெறுமதிக்கான முத்திரையினை ஒட்டுவதற்கு செயற்பட்டிருக்கவில்லை. | தேர்தல் சமயத்தில் உத்தியோகத்தர்களின் வேலைப்பழு காரணமாக இத்தவறு நேர்ந்துள்ளது. எிர்வரும் சந்தர்ப்பங்களில் குறைபாடுகள் ஏற்படாதிருப்பதற்கு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். | 2006 இலக்கம் 12 கெண்ட முத்திரைக் கட்டண விசேட (ஏற்பாடு) சட்ட மூலத்தின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய இலக்கம் 05/2016 கொண்ட அரச நிதி சுற்றறிக்கை | ஒவ்வொரு நிதியாண்டில் ஏப்ரல் 30 ஆந் திகதிக்கு முன்னர் தள்ளுபடி செய்யப்பட வேண்டிய திருத்தப்பட வேண்டிய, விற்கப்பட வேண்டிய மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு கையளிக்கக்கூடிய பொருட்கள் தொர்பாக உரிய முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் யூன் 15 ஆந் திகதிக்கு முன் சென்ற வருட பொருட் கணிப்பு அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும் அவ்வாறு பொது 47 அறிக்கையின் படி செயற்படாது பொருட் கணிப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2020 வருடம் தொடர்பாக திறைசேரி மற்றும் கணக்கு பரிசோதகர் 66 அறிக்கைகள் 2021.3.30 ஆந் திகதி கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் யூன் 15 திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையினை கொரோனா தொற்று காரணமாக சில தேர்தல் அலுவலகங்களை மூடிவிட நேர்ந்தமையினால் இத்தாமதம் ஏற்பட்டது என்பதனை அறியத் தருகின்றேன். | 2016 மார்ச் 31 ஆந் திகதிய இலக்கம் 05/2016 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

## 3.1 பொறுப்புக்களை நிறைவேற்றாமை

----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 பெப்ரவரி 10 திகதியன்று நடாத்தப்பட்ட உள்ளூராட்சி தேர்தலின் அறிக்கையினை 2021 மார்ச் 31 ஆந் திகதி வரையில் தயாரிக்கப்பட்டு முடிக்கப்படுவதாக மீளாய்வாண்டு செயற்திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்தாலும் கணக்காய்வு திகதி வரையும் அவ்வறிக்கையின் செயற்பாடுகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வறிக்கையினை அச்சிடும் செயற்பாடுகளை 2021 மார்ச் மாதம் முடிக்கப்படுவதாக 2021 வருடாந்த செயற்திட்டத்தில் உட்படுத்தப்பட்டாலும் இடைநடுவே ஏற்பட்ட கொவிட் 19 தொற்று பரவுதலும் அதன் காரணமாக அலுவலகங்கள் மூடப்பட்டதோடு பணிக்குழாம் குறைக்கப்பட்டு அவற்றை நடாத்திச் செல்வது போன்ற தவிர்க்க முடியாத நிலைமையின் பயனாக இக்காரியத்தினை முடிப்பதற்கு இயலாது போயிற்று. | உள்ளூராட்சி தேர்தல் அறிக்கையின் செயற்பாடுகள் விரைவில் முடிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் செயற்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்தின் விசேட திட்ட அலகின் கீழ் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 05 பிரதான காரியங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2021 வருடாந்த செயற்திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்த திட்டங்கள் தொடர்பாக செயற்படுவதற்கு இடையிடையே ஏற்பட்ட கொவிட் 19 தொற்று பரவுதல் மற்றும் அதன் பயனாக அலுவலகங்கள் மூடப்படுவதோடு குறைந்தபட்ச பணிக் குழாமினைக் நடாத்திச் செல்வது போன்ற தவிர்க்க முடியாத காரணங்களினால் அவற்றினை முன் நடாத்திச் செல்வதற்கு முடியாது போயிற்று. | செயற்திட்டத்தில் திட்டமிடப்பட்டிருந்த காரியங்களினை நிறைவேற்றிக் கொள்வதற்கு செயற்பட வேண்டும். |

## 3.2 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) பாராளுமன்ற பொதுத் தேர்தலில் மாத்தறை சுஜாதா வித்தியாலயத்தின் கட்டிடங்களை புதுப்பிக்கும் வேலைகளை பெறுகை வழிகாட்டல் கோவை 3.9.1 படி அங்கீகரிக்கப்பட்ட சங்கமான பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் மூலம் செய்வித்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தும் அத்தீர்மானத்திற்கு முரணாக ரூபா 1,325,654 புதுப்பித்தல் வேலைகள் அனுமதிக்கப்படாத வேறொரு சங்கத்தின் மூலம் செய்வித்துக் கொள்ளப்பட்டிருந்தது. | சுஜாதா வித்தியாலய பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் மூலமாக சம்பந்தப்பட்ட புதுப்பித்தல் வேலைகளை செய்வதற்கு வித்தியாலய அதிபர் இணங்காததால் மீண்டும் பெறுகை பெறுகை குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு வெளியேறிய கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் மூலம் பூர்த்தி செய்து கொள்ளப்பட்டுள்ளது. | வழிகாட்டல் கோவை 3.9.1 இன் படி வேலைகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) தேர்தல்கள் ஆணைக்குழுவின் இலக்கம் S/7(1) கொண்ட சுற்றறிக்கையின் படி ரூபா 1,000,000 விஞ்சும் பெறுகைகள், பெறுகைகள் குழுவின் பரிந்துரையுடன் பிரதான காரியாலயத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு ஆணைக்குழுவினது குழுவிற்கு அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 4,593,436 பெறுமதியான, மாத்தறை மாவட்ட பிரதான வாக்குகள் எண்ணப்படும் மையங்களின் புதுப்பித்தலுக்கான ஒப்பந்தத்திற்காக அவ்வாறான அனுமதியினை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் இவ் ஒப்பந்தங்களின் போது பெறுகை வழிகாட்டல்கள் | அனுமதிககான கடிதம் தலைமை அலுவலகத்திற்கு 2020.07.22 ஆந் திகதி அனுப்பப்பட்டது. | S/7(1) கொண்ட சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டியதுடன் மற்றும் பெறுகை வழிகாட்டல்கள் கோவையின் 8.9.1 பிரகாரம் செயற்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | கோவையின் 8.9.1 படி முறையான ஒப்புதல் கடிதங்கள் வழங்கப்படாதிருந்ததுடன் எழுத்துமூல உடன்பாடுகளும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | விலைமனு அழைப்பு பட்டியலின் இறுதி அத்தியாயத்தின் படி விலைமனுக்கள், பெறுகை சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டால் வழங்குனரால் உதவி தெரிவத்தாட்சி அதிகாரியுடன் உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திடப்பட வேண்டியிருந்த போதிலும், மாத்தறை மாவட்ட பாராளுமன்ற தேர்தல் அலுவல்களுக்காக ஒலிபெருக்கி இயந்திரங்கள் வாடகைக்கு பெற்றுக் கொள்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பெறுகையின் போது சம்பந்தப்பட்ட வழங்குனரால் அவ்வாறான ஒப்பந்த உடன்பாடினை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | விலைமனு அழைப்பு பட்டியலின் இறுதி அத்தியாயத்தின் படி வழங்குனரால் உதவி தெரிவத்தாட்சி அதிகாரியுடன் ஒப்பந்த உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2020 மார்ச் 11 இலக்கம் S/1(1) கொண்ட ஆணைக்குழு சுற்றறிக்கையின் (2) பந்தியின் பிரகாரம் வாக்கெடுப்பு தொடர்பாக மாவட்ட அலுவலகங்களினால் தயாரிக்கப்படும் மீள் மதிப்பீடுகளை பிரதான காரியாலயத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருப்பினும் கொழும்பு மாவட்ட றோயல் வித்தியாலய வாக்குகள் எண்ணப்படும் மத்திய நிலையத்தில் அத்தியாவசிய புதுப்பித்தல் மற்றும் | அம் 03 காரியங்களும் ஒன்றுக்கொன்று தனித்து தன்னகத்தே மேற்கொள்ளப்பட்ட 03 காரியங்களாகும். ஒன்றுக்கொன்று தனித்து தன்னகத்தே எடுத்துக் கொள்ளும் போது இதன் பெறுகை எல்லையானது ரூபா 1,500,000 மேல் ஆகாது. அதனால் பிரதான காரியாலயத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவில்லை. இக்காரியங்கள் எல்லாவற்றினையும் ஒரே சந்தர்ப்பத்தில் மேற்கொள்வதற்கு | இலக்கம் S/1(1) கொண்ட ஆணைக்குழு சுற்றறிக்கையின் (2) பந்திக்கு அமைய செயற்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளும் பொருட்டு வகுப்பறைகள் பழுதுபார்த்தல் மற்றும் தற்காலிக பிரிவு பகுதிகள் ஒழுங்குபடுத்தல்களுக்கான பெறுகைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட எவ்வித மதிப்பீடுகளுக்கும் பிரதான காரியாலயத்தின் அனுமதியினை பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் பொது பெறுகை விகாட்டல் கோவையின் 4.3.2 பந்தியின் பிரகாரம் ரூபா 100 மில்லியன் விஞ்சப்படாத இப்பெறுகைகளின் மொத்த கிரய மதிப்பீடுகளை திணைக்கள தலைவரின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | உத்தேசிக்கப்படாதிருந்த துடன் மிக அவசரமாக மேற்கொள்ளப்பட்ட பெறுகை செயற்பாடுகளாகும். ஆகையினால் அக்காரியங்களுக்காக திணைக்கள தலைவரின் அனுமதியினை பெற முடியாது போயிற்று. | |
| (உ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) பந்தியின் பிரகாரம் ரூபா 250,000 விஞ்சப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான ஒப்பந்தங்களுக்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கையினை கைச்சாத்திடப்பட வேண்டிய போதும், ரூபா 250,000 ஒப்பந்த பெறுமானம் விஞ்சப்பட்டிருந்த 2020 பொதுத்தேர்தலின் போது கொழும்பு மாவட்ட வாக்கு எண்ணும் மையங்களின் அத்தியாவசிய புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு மொத்தம் ரூபா 3,043,146 க்கான 03 பெறுகை செயற்பாடுகளுக்காக அவ்வாறு ஒப்பந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) பந்தியின் படி ஒவ்வொரு பெறுகை செயற்பாடு தொடர்பாகவும், ஒப்பந்தக்காரரோடு எழுத்து மூல உடன்படிக்கை கொள்ளப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகள் தனிக் கோப்பில் கோவைப்படுத்தப்பட்டுள்ளது | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) பந்தியின் படி ரூபா 250,000 விஞ்சப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான ஒப்பந்தங்களுக் காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.7.1(ஆ) பந்தியின் பிரகாரம், விலைமனு செயற்படும் காலத்தினுள் மற்றும் ஒப்பந்தத்தினை வழங்குதல் தொடர்பாக இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட உடன் ஒப்புதல் கடிதத்தினை வழங்கப்பட வேண்டியிருப்பினும், 2020 பொதுத் தேர்தலில், கொழும்பு மாவட்ட வாக்கென்னும் மையங்களில் அத்தியாவசிய புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்ட 04 பெறுகை பணிகள் தொடர்பாக அவ்ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழங்கல் தீர்மானத்தின் பின்னர் விலைமனுதாரர்களுக்கு ஒப்புதல் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் கடிதங்கள் தனிக்கோப்பில் கோவைப்படுத்தப் பட்டுள்ளன. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.7.1(ஆ) பந்தியின் படி விலைமனு செயற்படும் காலத்தினுள் மற்றும் ஒப்பந்தத்தினை வழங்குதல் தொடர்பாக இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட வுடன் ஒப்புதல் கடிதத்தினை வழங்கப்பட வேண்டும். |
| (எ) | 2020 பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் வாக்கெண்ணும் மையத்தில் புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும் பெறுகை செயற்பாடுகள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டினைக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட 05 காரியங்களுக்காக எவ்வித எழுத்துமூல அனுமதியும் இல்லாமல் ரூபா 169,278 வழங்கப்பட்டிருந்தது. | தேர்தலின் போது றோயல் கல்லூரியில் தெரிவு செய்யப்பட்ட வகுப்பறைகள் மற்றும் அடிப்படை திட்டங்களை இடையிடையே மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கமைய திருத்த வேண்டி வந்தது. இதன் காரணமாக அடிப்படை திட்டத்தின் சிலபல விடயங்களை செய்யாது விடுவதற்கும் புறம்பான விடயங்களை அச்சேமிப்பிலிருந்து மேற்கொள்வதற்கும் நேர்ந்தது. மேலும் தேர்தலின் பின்னர் கல்லூரி கட்டிடங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றிற்கு ஏற்பட்டிருந்த சேதங்களை திருத்தியமைப்பதற்கும் நேர்ந்தமையினால் அதன் பொருட்டு சந்தர்ப்பத்திற்கேற்ப செயற்பட நேர்ந்தது. | மதிப்பீட்டிற்கு புறம்பாக மேற்கொள்ளப் பட்ட வேலைகள் தொடர்பாக அனுமதியினை பெற்று பணம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.13.3(ஆ) பந்தியின் பிரகாரம் தொங்கோட்ட ஒதுக்கீட்டு மதிப்பிடப்பட்ட ஒப்பந்த தொகையில் நூற்றுக்கு 10 விஞ்சலாகாது. அவ்வாறாயினும், 2020 பொதுத்தேர்தல் தொடர்பாக கொழும்பு றோயல் கல்லூரி மற்றும் கொழும்பு இஸிபத்தன கல்லூரியில் வாக்குகள் எண்ணும் மையங்களின் அத்தியவசிய புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ளப்படும் பெறுகையிள் போது ரூபா 112,740 ஆன தொங்கோட்ட ஒதுக்கீட்டினை விஞ்சப்பட்டு மேற்கொள்ளப்பட்ட 19 திட்டமிடப்பட்ட வேலைகள் தொடர்பாக பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.13.4 படி அனுமதியினை பெற்றுக் கொள்ளாதிருந்த துடன் ரூபா 96,185 ஆன மதிப்பிடப்பட்ட 04 காரியங்கள் முழுமையாக செய்யாது விடப்பட்டிருந்தன. | தேர்தலின் பின்னர் மிகு குறுகிய காலத்தினுள் பாடசாலை கட்டிடங்களை கையளிக்க வேண்டியிருந்தமையினால் மதிப்பீடுகளுக்காக அனுமதியினை பெற்றுக் கொள்வதில் தவறு ஏற்பட்டுள்ளது. இத்தவறினை மீண்டம் ஏற்படாதிருப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.13.3(ஆ) பந்தியின் படி செயற்பட வேண்டியமை. |
| (ஐ) | கொழும்பு மாவட்ட வாக்குகள் எண்ணப்படும் மையங்களில் வாகன தரிப்பிடங்களுக்காக பாவனை செய்யப்படும் இடங்களில் அத்தியாவசிய மற்றும் தற்காலிக நிர்மாணப் பணிகளினை மேற்கொள்ளப்படும் பெறுகையின் போது ரூபா 190,805 ஆன குறைந்தபட்ச விலையினை அடிப்படையாகக் கொண்ட வழங்குனரை தெரிவு செய்யப்பட்டிருந்த போது இவ் ஒப்பந்தத்திற்கு அவ் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 208,619 வழங்கப்பட்டிருந்தது. | தேர்தலுக்காக றோயல் கல்லூரியின் தெரிவு செய்யப்பட்ட வகுப்பறைகள் மற்றும் அடிப்படைத் திட்டத்தினை இடையிடையே மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களினால் திருத்தப்பட்டன. இதன் காரணமாக அடிப்படைத் திட்டத்தினுள் இருந்த சில விடயங்கள் செய்யாது விடவும் புறம்பான விடயங்களினை அச்சேமிப்பிலிருந்து மேற்கொள்வதற்கும் நேர்ந்தன. இவ்வாறான கூடிய தொகையினை செலவிடுவதற்கு | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2.1(அ) பந்தியின் மீது கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதன்படி அவ்வாறு வழங்கப்பட்ட பெறுமானம் மற்றும் விலைமனுதாரர் இருவரினாலும் சமர்ப்பிக்கப்பட்ட விலையை விட கூடுதல் பெறுமானமாக இருந்தமையினால் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2.1(அ) பந்தியின் மீது கவனம் செலுத்துதப்பட்டிருக்கவில்லை. | நேர்ந்ததன் காரணம் அடிப்படை திட்டத் தொகைக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட வேலை அளவினால் ஆகும். | |
| (ஓ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.1 பந்தியின் பிரகாரம் முழு கிரய மதிப்பீட்டினை பெறுகையின் போது முழுமையாக தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கம்பஹா மாவட்ட பிரதான வாக்கெண்ணப்படும் மையங்களில் தற்காலிக குடில்கள் நிர்மாணிக்கப்படும் பெறுகையின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளில் பட்டியலினை மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் முழுமையான கிரய மதிப்பீட்டினை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முன்வரும் பெறுகை செயற்பாடுகளின் போது அரச பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைவாக முழுமையான கிரய மதிப்பீட்டினை தயாரிக்கப்பட்டு உரிய அனுமதியினை பெற்றுக் கொள்ளுமாறு மாவட்ட தேர்தல் காரியாலயங்களை அறிவுறுத்தப்பட்டுள்ளன. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.1 பந்தியின் படி செயற்பட வேண்டும். |
| (ஓ) | 2020 மார்ச் 11 ஆந் திகதிய S/7(1) கொண்ட குழு சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வாக்கெடுப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படும் பெறுகைகளின் போது விலைமனுக் கோரலில் நடைமுறை விலை முறைமையினை பயன்படுத்தப்பட்டு அதில் குறைந்தபட்சம் 05 விலைமனுக்களையாவது பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதாக குறிக்கப்பட்டுள்ள போதிலும் 2019 சனாதிபதி தேர்தலின் போது கம்பஹா மாவட்ட வாக்கெண்ணும் | நடைமுறை சந்தை விலைை முறைமையினை பயன்படுத்தப்பட்டு குறைந்தபட்சம் 05 விலைமனுக்களையாவது பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதாக அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | 2020 மார்ச் 11 ஆந் திகதிய இலக்கம் S/7(1) கொண்ட ஆணைக்குழு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | மையங்களில் 02 தற்காலிக நிர்மாணப் பெறுகைகளின் போது அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | | |
| (ஔ) | 2019 சனாதிபதி தேர்தலில் வாக்கெண்ணும் மத்திய நிலையமாக பயன்படுத்தப்பட்ட பத்தலகெதர சியனா கல்வியியல் கல்லூரி தளத்தின் தரையினை மட்டப்படுத்தி ஒழுங்கு செய்யும் பெறுகைக்காக சமர்ப்பிக்கப்பட்ட 03 விலை மனுக்கள் ஆகக்குறைந்த விலை மனுவினை அடிப்படையாகக் கொள்ளப்பட்டு ஒரு வழங்குனர் தெரிவு செய்யப்பட்டதுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அல்லது பெறுகைகள் குழுவின் அனுமதியினை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைய பெறுகைகளின் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பெறுகை குழுக்களின் அனுமதியினை முறையாக பெற்றுக் கொள்ளும் படி மாவட்ட உதவி மற்றும் பதில் தேர்தல் ஆணையாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைவாக பெறுகைகளின் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் பெறுகை குழுக்களின் அனுமதியினை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கண்டி மாவட்ட தேர்தல் காரியாலயத்தில் 25 வாக்குப் பெட்டிகள் மற்றும் 05 கணினிப் பொறிகளின் குறைபாடு காணப்பட்டதுடன் மாவட்டத்திற்கு சொந்தமில்லாத 07 வாக்குப் பெட்டிகளும் இருந்தன. | திருத்த வேலைகளுக்காக அரச தொழிற்சாலைக்கு ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் திருத்தப்பட முடியாமல் தள்ளுபடி செய்யப்பட்ட வாக்குப் பெட்டிகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட ஏடுகளில் இற்றைப்படுத்தப்படாமை யினால் இத்தவறினை ஏறபட்டுள்ளமையினை காணப்படுவதுடன் இவ்வாக்குப் பெட்டிகள் தொடர்பாக பௌதீக ரீதியான பரீட்சிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 2021 | பொருட் கணிப்பீட்டின் பரிந்துரைக்கு அமைய செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பொருட் கணிப்பின் பின் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |

**3.4 முகாமைத்துவ பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) ஆணைக்குழுவினால் பிரதான காரியாலயத்திற்கு அருகில் அமைந்துள்ள ஆணைக்குழுவிற்குச் சொந்தமில்லாத ஒரு காணியில் ரூபா 1,771,701 செலவிடப்பட்டு கட்டிடமொன்றினை நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட திகதி வரையிலும் அக்காணியின் உரிமையினை ஆணைக்குழுவினால் கையேற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இக்காணியினை தேர்தல் ஆணைக்குழு கையேற்கும் செயற்பாடுகளில் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இக்கட்டிடம் தற்போது கழிவுப்பொருட்கள் மற்றும் வாக்குப் பெட்டிகள் களஞ்சியப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. | காணியின் உரிமையினை ஆணைக்குழு கையேற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) 2018 மற்றும் 2019 வருடங்கள் முதல் கொண்டு தொடர்ந்தும் வரும் மொத்தம் ரூபா 122,900 ஆன வாகனங்களுக்கு ஏற்பட்ட நட்டங்கள் தொடர்பாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செயற்பட்டிருக்கவில்லை. | 2018 மற்றும் 2019 வருடங்களில் நடந்த விபத்துக்கள் தொடர்பாக வாகனங்களின் நட்டத்தினை புத்தகத்திலிருந்து தள்ளுபடி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வாகனங்களுக்கு ஏற்பட்ட சட்டங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டியமை. |
| (இ) 2020 வருடம் கெப் வாகனமொன்றிற்கு ரூபா 2,075,845 ஆன நட்டம் தொடர்பாக 2022 மார்ச் 21 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக திணைக்கள பரீட்சிப்பு முடிக்கப்பட்டு இன்னும் பரிந்துரைகள் பெற்றுத் தரப்படவில்லை. அச்செயற்பாடுகள் முடிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அறிக்கையினை பெறப்பட்டதன் பின்னர் மேற்கொண்டு நடவடிக்கைகள் துரிதமாக முடிக்கப்படும். | வாகனங்களுக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டியமை. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆணைக்குழுவில் மூத்த மட்டத்திலான 9 பதவிகள், மூன்றாம் மட்டத்திலான 05 பதவிகள், இரண்டாம் மட்டத்திலான 37 பதவிகள் மற்றும் முதலாம் மட்டத்திலான 14 பதவிகள் வெற்றிடங்களாக உள்ளன. | நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | வெற்றிடங்களுக்கான பதவிகளை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |